# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

உலக தலைமையகம், செயின்ட் தாமஸ் சமூகம், குட்டப்புழா அஞ்சல்,
திருவல்லா - 689103 கேரளா, இந்தியா.

## மேப்பனின் கடிதம்

எனக்கு அன்பான மேய்ப்பர்களுக்கும், பரிசுத்த திருச்சபையின் விசுவாசிகளுக்கும்

ஒரே தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே,. ஆமென் ✠

உங்களுக்கு கடிதங்கள் எழுதுவது எவ்வளவு மகிழ்ச்சியும் பாக்கியமும் என்பதை சொல்வதன் மூலம் நான் தொடங்குகிறேன். உங்கள் ஆவிக்குரிய பிதாவாக நான் அனுப்பும் இந்த கடிதங்கள் முக்கியமானவை, ஏனென்றால் இந்த காலத்தில் நமது திருச்சபைக்காக தேவன் என் இருதயத்தில் வைத்ததை பகிர்ந்து கொள்ளவும், உங்கள் ஒவ்வொருவரையும் நான் எவ்வளவு ஆழமாக மதிக்கிறேன் என்பதை உங்களுக்கு நினைவூட்டவும் அவை என்னை அனுமதிக்கின்றன. திருச்சபையின் பேராயர்கள் மற்றும் சபை பிதாக்கள் தங்கள் மந்தைக்கு எழுதுவது கிறிஸ்தவத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் இருந்தும் இன்றும் உள்ளது. இந்த கடிதங்களில் பல இன்றும் பாதுகாக்கப்படுகின்றன. திருச்சபையின் ஒற்றுமையை வலுப்படுத்த அவை பயன்படுத்தப்பட்டன, நாங்கள் தனிமைப்படுத்தப்படவில்லை அல்லது சுயாதீனமாக இல்லை என்பதை முழுமையாக அறிந்திருந்தோம்; நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்புகள். திருச்சபையைப் பின்பற்றுவது என்பது திருச்சபையின் தலையாகிய கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகும்.

செயின்ட் சைப்ரியன் சொன்னது போல்:

*"தன் தாய்க்கு சபை இல்லாதவன் தன் தந்தைக்கு தேவன் இல்லாதவன்"*

திருச்சபை நாட்காட்டி

ஒற்றுமையின் ஒரு முக்கிய வழிமுறை திருச்சபை நாட்காட்டி ஆகும். இது நமது பெருமைமிக்க மனதை தாழ்த்தி இயேசு கிறிஸ்துவை அன்றாட வாழ்க்கையின் மையத்தில் வைத்திருக்கிறது. இது நேரம், - நாட்கள், வாரங்கள் மற்றும் மாதங்களை ஆவிக்குரிய பரினாமத்திற்கு நேராக உயர்த்தி பரிசுத்தப்படுத்துகிறது . இந்த நாட்காட்டி கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் இரட்சிப்பின் வரலாற்றினால் பரிசுத்ததிற்கு நேராக நம்மை வழிநடத்தி பண்டிகைகள், உபவாசங்கள் மற்றும் கடந்து சென்ற பரிசுத்தவாங்களின் நினைவுக்கூறுதல் ஆகியவையால் ஒரே தாளத்தில் நம்மை இணைக்கிறது

செயின்ட் பேசில் தி கிரேட் நமக்கு நினைவூட்டுவது போல்:

*"திருச்சபை உபவாசங்கள் மற்றும் பண்டிகைகள் நமக்கு சுமையாக இருப்பதற்கல்ல, மாறாக நம் ஆத்மாக்களைப் பயிற்றுவிக்கவும், நம் இருதயங்களை தேவனுக்கு நேராக திருப்புவதற்குமே நியமிக்கப்பட்டது."*

செயின்ட் ஜான் கிரிசோஸ்டோம் நம்மை மேலும் ஊக்குவிக்கிறார்:

*"திருச்சபையால் நியமிக்கப்பட்ட பண்டிகைகளை நாம் புறக்கணிக்கக்கூடாது, ஏனென்றால் அவற்றில் நாம் போதனையும் ஆவிக்குரிய பெலனையும் பெறுகிறோம்."*

ஆகையால், எனக்கு மிகவும் அன்பானவர்களே, தேவனை மையமான வாழ்க்கை வாழ்வதற்காக திருச்சபை நாட்காட்டியைத் தழுவுமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

<u>புதிய வழிபாட்டு ஆண்டு</u>

பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச் 2 நவம்பர் 2025 அன்று புதிய வழிபாட்டு ஆண்டில் பிரவேசிக்க தயாராகி வருகிறது. திருச்சபை நாட்காட்டி மற்றும் புதிய வழிபாட்டு ஆண்டிற்கான லெக்ஷ்னரி தயராக உங்கள் தனிப்பட்ட நகலைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறது.

<u>விசுவாசிகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>

• அதைக் கேளுங்கள்: உங்கள் திருச்சபை குருவானவரிடமிருந்து ஒரு நகலைக் கோளுங்கள். உங்கள் குடும்பத்தில் குறைந்தது ஒன்று இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்,உங்கள் வீட்டில் எல்லோரும் பார்க்கக்கூடிய ஒரு முக்கிய இடத்தில் தொங்கவிடுங்கள்.

• அதைப் படியுங்கள்: உங்கள் குடும்பத்துடன் காலெண்டரைப் பார்க்கவும். பண்டிகைகள் மற்றும் தவக்காலங்களில் தேதிகளைக் கவனியுங்கள். ஈஸ்டர், கிரேட் லென்ட் மற்றும் பிற முக்கியமான பருவங்கள் போன்றவை, எனவே நீங்கள் அவற்றை சரியாகக் கவனிக்க முடியும்.

• அதனுடன் திட்டமிடுங்கள்: பெரிய நோன்பு என்பது நமது திருச்சபையின் ஒரு குறிப்பிடத்தக்க பருவமாகும். அனைத்திலும் கலந்துகொள்வதற்கு முன்னுரிமை அளிக்கவும் மற்றும் திருச்சபையின் ஜெபங்கள், சேவைகள். தவக்கால முறையைப் பின்பற்றுங்கள் - இறைச்சியைத் தவிர்க்கவும், தொலைபேசி பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும் அல்லது தேவையில்லாமல் பணத்தையும் நேரத்தையும் செலவழிக்க வேண்டாம், நீங்கள் சேமித்து வைப்பதை தானம் கொடுக்க பயன்படுத்தவும். இந்த 40 நாட்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு முழு கவனம் செலுத்துவதற்கான பில கடமைகளையும், வழிகாட்டுதலையும் உதவியையும் பெற திருச்சபையின் குருவானவரின் உதவியை நாடுங்கள்.

• அதை கையளித்தல்: திருச்சபையின் நாட்காட்டியைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். கூட அவர்கள் படிக்கவோ அல்லது வேலை செய்யவோ சென்றால், அதைக் கவனிக்க அவர்களை ஊக்குவிக்கவும். குழந்தைகள் நம்மைக் கவனித்து கற்றுக்கொள்கிறார்கள், பெற்றோர்களும் பெரியவர்களும் முன்மாதிரியாக வழிநடத்த வேண்டும். இந்த வாழ்க்கை முறையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வது தேவன் நமக்கு கொடுத்த பொறுப்பு.

<u>குருமார்களுக்கான அறிவுறுத்தல்கள்</u>

• மேய்ப்பராக இருங்கள்: திருச்சபை நாட்காட்டியைப் பின்பற்றி உங்கள் திருச்சபையை மென்மையாக வழிநடத்துங்கள். காரணம், நீங்கள் எதை செய்கிறீர்களோ அதையே உங்கள் திருச்சபை உறுப்பினர்கள் பின்பற்றுவார்கள்.

• நாட்காட்டியை கண்டிப்பாகப் பின்பற்றுங்கள்: உங்கள் வசதிக்காக அல்லது வேறு காரணத்திற்காக திருச்சபையின் பண்டிகை, தவக்காலங்களை புறக்கணிக்க வேண்டாம். வழங்கப்படும் இந்த காலண்டரை பயன்படுத்தி ஒவ்வொரு திருச்சபையின் நிகழ்விற்கும் தேவையான அனைத்து கரியங்களையும் கடைபிடிக்க பரிசுத்த திருச்சபையின் சினெட் மற்று தலைமை செயலகம் வலியுறுத்துகிறது.

• கற்றுக்கொள்ள ஆர்வமாக இருங்கள்: உங்களுக்குத் தெரியாத ஏதாவது இருந்தால், மனத்தாழ்மையுடன் உங்கள் வழிநடத்துதலைப் மறைமாவட்ட பிஷப் மற்றும் அல்லது மறைமாவட்ட விகாரிடம் பெறுங்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும் என ஒருபோதும் திருப்தி அடைய வேண்டாம்; எப்போதும் மேலும் அறிய முயற்சி செய்யுங்கள்.

• லெக்ஷனரியை பயன்படுத்துங்கள்: லெக்ஷனரி ஜெபத்துடன் கவனமாக தயாரிக்கப்பட்டுள்ளது. வசனங்களும் கருப்பொருட்களும் கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகின்றன. இவை பரிசுத்த திருச்சபையின் விசுவாசம் மற்றும் பரிசுத்த பாரம்பரியத்தில் வளர விசுவாசிகளுக்கு உதவுகின்றன. அதை விடாமுயற்சியுடன் பின்பற்றவும்.

எனக்கு பிரியமானவர்களே, இயேசு தம்முடைய பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தில், (யோவான் 17:17-19) " உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் " – என்றும் "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:2)ல் அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார்: இதை நாம் சொந்தமாக செய்ய முடியாது; நமக்கு பரிசுத்த ஆவியின் உதவி தேவை. இதை திருச்சபையின் பிதாக்கள் இந்த வசனமாகிய வழிகாட்டுதலினால் திருச்சபைக்கு வழங்கினர். அது வரவிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தை நோக்க உறுதியாக இருக்கின்றன.

✠ பரிசுத்த திரித்துவம் - பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் - உங்கள் இருதயத்தை ஒளிரச் செய்வாராக, உங்கள் இருதயம் தேவனைப் பற்றிய அறிவில் வளரவும், உங்கள் கண்களைத் திறக்கவும், மற்றும் பரிந்துரைகள் மூலம் பரிசுத்த தியோடோகோஸ் மற்றும் அனைத்து பரிசுத்தவான்களின், இந்த மாதிரியின்படி வாழவும் நாம் ஜெபிப்போம். ஆதியிலும், இப்போதும் எப்போதும் சதாகாலமும் மகிமை உண்டாவதாக. ✠ ஆமென்.

கிறிஸ்துவில் உங்கள் ஆவிக்குரிய தந்தை

**மோரான் மோர் சாமுவேல் தியோபிலஸ்**
**மெட்ரோபாலிட்டன்.**

**தேதி:** 2 அக்டோபர் 2025
**இடம்:** உலக தலைமை செயலகம்